மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரம் நடுகிற திட்டத்திலே பல்வேறு தலைப்பின் கீழ் நடுகிறார்கள். இப்போது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி விரைவிலே வளர்கிற மரங்களை நடுகிற திட்டத்தைப் பற்றியாகும். அதைத்தான் மரக்கூழ் தயாரிக்கிற தோட்டங்களுக்கான திட்டம் என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன். பல்வேறு திட்டங்களில் வருகிறபோது நீண்டகாலம் பலன் தரக்கூடிய புளியமரமும் வருகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கிராமப்புறங்களில் ஏராளமான புறம்போக்கு நிலங்கள் தனியார் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. அரசு அவைகளை கையகப்படுத்தி மரங்களை வளர்க்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலங்களில் எல்லாம் மரங்கள் வளர்க்கிற திட்டம் தான் சமுதாய காடு வளர்க்கிற திட்டம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இது வரையில் எத்தனை கோடி கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் கன்றுகளை நட்டு வருகிறோம். இன்னொரு பக்கம் மரங்களை வெட்டிச் செல்கிற நிலைமை இருக்கிறதே, இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தனியாக ஒரு கேள்வி கேட்கப்பட்டால் விவரமாகப் பதில் தர முடியும்.

கல்லணையில் சுற்றுலா தங்கும் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 145.—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கல்லணையில் கட்டப்படவிருக்கும் சுற்றுலா தங்கும் விடுதியின் தொடக்கப்பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

(ஆ) இத் திட்டத்திற்கு அரசின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) கல்லணை மாவட்ட உலாத்தலமாக மேம்படுத்தப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அங்கே ரூ. 1.54 இலட்சத்தில் உணவுக்

கூடத்துடன் இணைந்த நூயிலக விடுதி கட்ட மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து திட்ட அறிக்கை பெறப்பட்டு, இப்போது நம் மேல் நடவடிக்கையில் உள்ளது. சுற்றுலா தங்கும் விடுதி கட்டுவது பற்றி தேவைக்கேற்பவும் நிதிவசதிகள் கிடைத்த பின்னும் யோசிக்கப்படும்.

நாங்குநேரி தாலுகா அரசர்பத்து பகுதியில் பயிர்களை அழிக்கும் காட்டு யானைகளை தடுக்கும் திட்டம்.

*வினா எண். 146.—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகா மஞ்சுவினை ஊரில் உள்ள அரசர்பத்து பகுதியில் விவசாயிகளின் பயிர்களை அழிக்கும் காட்டு யானைகளை தடுக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

(ஆ) இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவித் தொகை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) இப்படி பாதிக்கப்படுகிற பகுதிகளில் பயிர்க் காப்பீடு திட்டம் ஒன்றை மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இப்படி பயிர்களை அழிக்கக்கூடியவை யானைகள் மட்டுமல்லாது குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலையோரத்தில் உள்ள பயிர்கள் பூராவற்றையும் காட்டுப் பன்றிகள் அதேபோல் குரங்குகள் மற்றும் காட்டில் வாழக்கூடிய மற்ற மிருகங்கள் அழித்துக்கொண்டிருக்கின்றன. எனவே அந்தப் பயிர்களைப் பாதுகாக்க அரசு விசேஷ நடவடிக்கைகள் ஏதாவது எடுக்குமா? மேலும் அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசே நிவாரணம் அளிக்க ஏதாவது உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இப்படி வன விலங்குகள் அல்லது வேறு மிருகங்கள் மூலம் ஏற்படும் நஷ்டத்திற்கு அவ்வப்போது விவசாயிகளிடமிருந்து வருகிற விண்ணப்பங்களைப் பரிசீலித்து தனியாக முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் பொதுவாக ஒரு கொள்கை முடிவாக எடுக்கப்பெற்று இப்படிப் பட்ட பயிர்கள் பாழாகிற நேரத்தில் அதில் பாதிக்கப்பட்டோருக்கு காப்பீட்டுத் தொகை வழங்குகிற ஒரு திட்டத்தைப் பற்றி இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனோடு அதிகாரிகள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.